International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பெரியபுராணத்தில் மகளிரின் பக்தி வாழ்வியல்

**வெ. ஜெயலட்சுமி**
பெரியார் பல்கலைக்கழக பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

**முனைவர் சா. பூங்கொடி,** உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் 16

**ஆய்வுச் சுருக்கம்**

பக்தி என்பது இறைவனிடத்தில் கொள்ளும் ஆழமான அன்பு, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பாகும். எவ்வித எதிர்பார்ப்புமின்றி இறைவன் மீது செலுத்தும் தூய்மையான அன்பு தனக்கும், இறைவனுக்கும் இடையே ஒரு நெருக்கமான பிணைப்பை உணரும் நிலையே பக்தி எனப்படுகிறது. இத்தகைய பக்தி நிலையையே பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வாழ்வின் மூலம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாயன்மார்களின் புகழுக்கு அவர் மட்டுமல்லாது அவர்தான் துணைவியரும் உடனிருந்து, மனமுவந்து தொண்டுள்ளத் தோடு இல்லற நெறி பின்பற்றி வந்துள்ளனர். இத்தகைய சிறப்பிற்குரிய இல் மகளிரின் தொண்டுள்ளத்தை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும் பல பெருமைகளை பெற்றுள்ள பெருமைக்குரிய பெரியபுராணத்தின் சிறப்பிற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இம்மகளிர் தனித்துவத்துடன் சிவத்தொண்டு புரிந்து வந்துள்ளமையை இவ்வாய்வின் மூலம் ஆராய்வதே தலையாய நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்:** பெரியபுராணம், பக்தி, இல்லற மகளிர், சிவத்தொண்டு, நாயன்மார்கள், வாழ்வியல்.

**Abstract**

Bhakti refers to a deep and profound love for God. It is an attitude of faith and surrender. The pure love offered to God without any expectation creates an intimate bond between the devotee and the Divine; this state is known as Bhakti. The Periya Puranam illustrates such a state of devotion through the lives of the sixty-three Nayanmars. Not only the Nayanmars themselves, but also their wives stood by them, willingly participating with devoted hearts and following the righteous path of household life. The objective of this research is to examine the devoted service -mindedness of these illustrious women. The primary aim of this study is to explore how these women, who add further distinction to the greatness of the revered Periya Puranam, carried out Shiva's service with unique dedication, thereby enhancing its already exalted glory.

**Key words** – Dedication, Nayanmars, Domestic Ethics, Women of the Household, Devotion.

## முன்னுரை

இல்லறமே நல்லறம் என்பதற்கு இலக்கணமாய் திகழ்வார்கள் பெண்களை அவ்வகையில் நாயன்மார்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்தவர்கள் அவர்தான் துணைவியரை தங்களின் கணவன்மார்கள் சிவ தொண்டில் ஈடுபட்டபோது அவர்களுக்கு ஒரு துணையாகவும், சில நேரங்களில் கணவர்களுக்கே வழிகாட்டும் ஆன்மீக பலத்தோடும், இப்பெண்கள் திகழ்ந்தனர்.

பாண்டிய மன்னன் சமணத்தைச் சார்ந்திருந்த போதும், கணவரையும், நாட்டையும் சைவ சமயத்தோடு மீண்டும் கொண்டு வந்து சேர்த்த பெருமை மங்கையர்க்கரசி யாரையே சாரும். இதனால் சம்பந்தர் பாண்டிய நாட்டில் எழுந்தருளினார். இதன் காரணமாக கூன் பாண்டியனின் கூனும் நிமிர்ந்து நின்ற சீர் நெடுமாறனாக அறியப்பட்டார் திருநாவுக்கர சரை, திலகவதியாறின் சிவபக்தியே சூலை நோய் கொண்டு சிவனால் அருள் செய்யப் பட்டு அந்நோய் நீங்கி திருநாவுக்கரசரால் மீண்டும் சைவம் வளர்க்கப்பட்டது. இதனாலேயே தமிழ்நாட்டின் மதி என்று போற்றுதலுக்கு உரியவர்களாய் திகழ்கின்ற னர் மங்கையர்க்கரசிரும் ,திலகவதியாரும், இசைஞானியார் பெற்றெடுத்த அரும்பெரும் புதல்வர் சுந்தரரால் சைவச் சுடரொளி தமிழகமெங்கும் பரவியது காரைக்கால் அம்மையாரின் சிவபக்தியே அவரை திருக்கைலாயத்தில் பாதம் படாமல் நடக்கும் சிறப்பிற்குரிய தாய் காட்டியது இத்தகைய செயல்களால், இம்மகளிர் தனி அடியாரா கவும் சிவனடியார் மனைவியராகவும் சிறப்பு பெற்று விளங்கினர்.

## மங்கையர்க்கரசியார்

பெரியபுராணத்தில் தொகையடியார்களும், தனியடியார்களும் இணைந்த தொகையின் படி அறுபத்தாறாவது அடியவராக மன்னியசீர் சருக்கத்துள் மங்கையர்க்கரசி யார் வரலாறு மூன்று பாடல்களால் குறிக்கப்பட்டுள்ளது. சேக்கிழாரும் மங்கை யர்க்கரசியாரை, 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் குலதெய்வம்' என்று போற்றுகின்றார். சோழநாட்டில் பிறந்த மங்கையர்க்கரசியார் பாண்டிய நாட்டின் கூன்பாண்டியன் என்னும் நின்றசீர் நெடுமாறனின் வாழ்க்கைத் துணையானார். "வரிவளையாள் மானிக்கும்... அடியேன்" என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் மங்கையர்க்கரசியாரைப் பாராட்டுகின்றார்.

**"பூச லயிற்றென்ன னார்க்கன லாகப்**
**பொறாமையினால்**

**வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியா**
**மானிகண்டீர்**

**தேசம் விளங்கத் தமிழாக ரர்க்கறி**
**வித்தவரால்**

**நாசம் விளைத்தா ளருகந்த ருக்குத்தென்**
**னாட்டகத்தே"**[1] என்று போற்றப்பட்டார்.

பாண்டிய நாடு முழுமையும் சமணம் பரவியிருந்த நிலையில் சைவத்தின் பெருமையை நிலைநாட்ட அம்மையார் விரும்பினார். அக்காலத்தே சோழநாட்டில் திருமறைக்காட்டில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் கதவு திறக்கவும் மூடவும் பதிகங்களைப் பாடிய நிலையில் சைவத்தின் பெருமையை நிலைநாட்டியிருப் பதனை அறிந்து அமைச்சர் குலச்சிறை யாரை அழைத்து அற்புதங்களை நிகழ்த்தும் அடியார்களை அழைத்து வருமாறு குறிப்பிட்டார். திருநாவுக்கரசர் சமணர்களால் பட்ட தொல்லைகள் காரணமாகத் தான் வரவில்லை என்றுரைத்துத் திருஞானசம்பந் தரையும் போக வேண்டாம் என்று தடுத்தார். ஆனால், சைவம் மீண்டும் தமிழகத்தில் தழைக்க வேண்டும் என்பதனையே குறிக் கோளாகக் கொண்ட ஞானசம்பந்தர் பாண்டிய நாடு சென்றடைந்தார். ஞானசம்பந்தரால் மீண்டும் சைவ சமயத்தில் பாண்டிய நாடு மாறி விடும் எனும் அச்ச மேலீட்டால் சமணர் அவர் தங்கியிருந்த மாளிகையைத் தீயிட்டுக் கொளுத்தினர். யு சமணர்களால் ஏற்பட்ட தீ முழுவதும் பாண்டிய மன்னனையே சென்றடைய வேண்டுமென்றார் சம்பந்தர், அத்தீயானது பாண்டிய மன்னனை வெப்பு நோய்க்கு ஆளாக்கியது. அரண்மனை வைத்தியர்களால் சரிசெய்ய இயலாத நிலையில், பாண்டிய மன்னனைக் கண்ட ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" திரு நீற்றுப்பதிகம் பாடிய நிலையில் வெப்பு நோய் நீங்கியது. பின்னர் சமணர்களை

அனல் வாதத்திலும், புனல் வாதத்திலும் வெற்றி பெற்றார்.

இவ்வகையில் மங்கையர்க்கரசியார் தம் வாழ்நாளில் சமணர் ஆதிக்கத்தை வீழ்த்தி சைவத்தை மீண்டும் தழைக்கச் செய்தார். சைவநெறி தழைத்தோங்க செய்தமை அம்மையாரின் அருந்தொண்டாகும்.

**“வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி**

**வளம்பெருக்க வளவர்குலம் பெருக்குந் தங்கள்**

**திருநாடு போற்செழியர் தென்னர்நாடு**

**சீர்விளக்குஞ் செய்யரீ றடிகள் போற்றி”**[2] என்று பாராட்டுகின்றார்

**காரைக்கால் அம்மையார்**

பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்த பெருமையை சேர்க்கும் சிறப்புடையவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இறைவனால் அம்மையே என்று அழைக்கப் பட்ட சிறப்புடையவர். சோழவளநாட்டில் கடற்கரைச் சங்குகளால் வளம் பெற்றுத் திகழும் பெருமையுடையது காரைக்கால் என்னும் பழம்பதியாகும். அந்நகரில் அறநெறி தவறாத, வாய்மையில் சிறந்த வணிகர்கள் நிறைந்திருக்கும் பகுதியில் தனதத்தன் என்பவர் குலத்தலைவரின் மகளே ஆவார். சேக்கிழாரும்,

**“மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்**

**ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி**

**கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்**

**கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்”**[3]

என்று காரைக்காலின் பெருமையையும் தருமநெறியையும், மானம் மிகுக்குடியையும் சிறப்பிக்கிறார். காரைக்காலம்மையாரை,

**“மடுத்தபுனல் வேணியினார் அம்மை என மதுரமொழி**

**கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில் அவர்”**[4] என்று போற்றுகிறது.

பேரழகே திரண்டாற் போன்ற புனிதவதியா ருக்கு தொல்குல வணிக முறைப்படி மணம் பேசினர். பெண் கேட்ட நிலையில் தந்தையும் சம்மதிக்கிறார். தளிர்போலும் திருவடிகளும், மயிலின் சாயலையும் உடைய புனிதவதி யாரை காளை போன்ற பரமதத்தனுக்கு சுற்றத்தார் மகிழ மணம் செய்தனர். இதனை,

**“தளிரடி மென்நகைமயிலைத் தாதவிழ் தார்க்காளைக்குக்**

**களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்”**[5] என்றும்

இல்லறம் நல்லறமாக இனிதே நடைபெற்றது என்றும் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இறையடி யாராகிய சிவனடியார்களுக்கு புனிதவதியார் இல்லம் தற்போது நல்ல உணவை அளிப்பதோடு செம்பொன்னும் நவமணி களும், செழுமை மிகு ஆடைகளும் தந்து அடியார்களை உபசரித்து வந்தார். பரமதத்தனிடம் வந்த அடியார் மாங்கனிகள் இரண்டை இல்லத்திற்கு அனுப்பி வைத்தார். புனிதவதியாரின் பெருமையை உலகிற்கு உணர்த்த விரும்பிய சிவனார் மெய்த் தொண்டர் வடிவில் புனிதவதியின் இல்லம் அடைந்தார். வந்த சிவனடியாரைக் காக்க வைக்காமல் தன் வீட்டில் பரமதத்தன் மூலம் அனுப்பப்பெற்ற கனிகளுள் ஒன்றைக் கொண்டு அமுதம் செய்வித்தார். வந்திருந்த சிவனடியாரும் உணவுண்டு புனிதவதியாரை வாழ்த்தி விடைபெற்றார். நண்பகல் உணவுக்கு வந்த பரமதத்தனுக்கு அருகிலிருந்து உணவிட்டு. வீட்டிலுள்ள மற்றொரு கனியோடு உணவு படைத்தார். மாங்கனியை உண்ட பரமதத்தன் அதன் சுவை மிகுதியாக இருந்தமையால் மற்றொரு கனியைக் கொண்டு வருமாறு பணித்தான். தன் கணவன் கேட்டு இல்லையெனக் கூறுவது இழுக்கென உணர்ந்த அம்மையார் இறைவனை வேண்டிய நிலையில் மாங்கனியொன்று கிட்டியது. இதனை,

**“அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென் செய்வார்**

**மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்”**[6] என்பர் சேக்கிழார்.

புனிதவதியைப் பிரிந்த பரமதத்தன் மதுரை அடைந்தான். அங்குக் கன்னியொருத்தியை மணந்து மறைந்த நிலையில் வாழ்ந்து வந்தான். பரமதத்தன் மதுரையில் இருப்ப தறிந்து தன் சுற்றத்தினருடன் புனிதவதியார் மதுரை வந்தடைந்தார். புனிதவதியாரை நேரில் கண்ட பரமதத்தன் அவரை வணங்கக் கண்டு உறவினர் அனைவரும் திகைப் புற்றனர். தான் வணங்க வேண்டிய கணவரே தன்னை வணங்குவது கண்டு, தனக்குத் தசையுடம்பு நீக்கிப் பேய் வடிவம் கொடுத்து விடு என இறைவனை வணங்கினார். இந்நிலையில் புனிதவதியார் வேண்டிக் கொண்டபடி வானும், மண்ணும் வணங்கும் படி பேய் வடிவினை இறையருளால் விரும்பிப்பெற்றார். உள்ளே தோன்றி எழுந்த ஞானத்தால் அற்புதத் திருவந்தாதியையும் அந்தாதித் தொடையமை இரட்டை மணி மாலையையும் பாடினார். இறைவனைக் காணத் தலையால் நடக்கவும் துணிந்தார். இதனை,

**“தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி**

**மலையின் மேல் ஏறும்போது மகிழ்ச்சியால்”**[7]

உமையம்மை தமது காலை நோக்கிய நிலையில் எலும்புக்கூடு ஒன்று நடந்து வருவது கண்டு அதிசயிக்கிறாள். அதற்குச் சிவனார், வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் என்கிறார். அம்மையாரும் சிவனாரிடம்இ ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமானைக் காரைக்கால் அம்மையார் பாடி இறைவனோடு இரண்டறக் கலந்தார். காரைக்கால் அம்மையாரைத் தெய்வம், பேய், அம்மை என்னும் மூன்று நிலைகளில் வைத்து நோக்குகையில் அம்மை என்பதே சிறப்புடையதாகின்றது.

**“மடுத்தபுனல் வேணியினார் அம்மை என மதுரமொழி**

**கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண்ட வத்தில் அவர்”**[8] என்றும் போற்றுகின்றார்.

இறைவனையே ‘அம்மை’ என்று போற்றப் பட்ட சிறப்புக்குரியவர் திகழ்பவர் காரைக்கால் அம்மையார் ஆவார்.

**இசைஞானியார்**

சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடைப்பட்ட நடுநாட்டில் திருநாவலூரில் சடையனார் என்பாரின் இல்லம் சிறந்து விளங்கவும் சிவநெறி தவறாது அறநெறி தழைத்தோங்கவும் நின்ற பெருமைக்குரியவர் இசைஞானியார் ஆவார். சுந்தரர் என்னும் பெரிய புராணத்தின் நாயகனை ஈன்றெடுத்த பெருமைக்குரியவர். முப்புரமும் எரித்த சிவ பெருமானின் தோழரைப் பெருமைக்குரியவர்.

**“சிவவேதியர் குலத்தைச் சேர்ந்தவர்,**

**மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்**

**வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனாருக்கு”**[9]

உலகில் தீமை நீங்கவும், உய்தி பெறவும், சுந்தரர் தோன்றியமையை இவ்வாறு விளக்குகிறார். பெரியபுராணம் குறிப்பிடும் தனியடியார்கள் என்ற குறிப்பிலிருந்து மூன்று பெண் அடியார்கள் வரலாறு தனித்தனியே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

காரைக்காலம்மையார் பேய் வடிவம் பெற்றதோடு அமையாது, இறைவனே இவருக்கு நேரில் தோன்றிக் காட்சியளித்து இவருடைய வேண்டுகோள்படி அம்மையார் பாட பரமசிவமும் பார்வதியும் இணைந்து ஆடியமையும் சிறப்பிற்குரியது. வேதியர் களைப் போற்றி வந்த குலத்து வந்த இசைஞானியாரைச் சேக்கிழாரும் வழி வழி அடிமை செய்யும் குலம் என்கிறார். இதனை,

**“மாதொரு பாக லார்க்கு வழிவழி அடிமை செய்யும்**

**வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னாருக்கு**

**ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால்**

**தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார்”**[10]

என்றும் சேக்கிழார் பாராட்டுகின்றார்.

**முடிவுரை**

குடும்ப நெறியாகக் கொள்ளக் கூடிய பணி உணவிடும் பணியே. அதனையே தலைமை யான பணியாகக் கொண்டனர். அடியவர்

பணிக்காகத் தன்னையே தருவதற்குத் தயார் நிலையில் நின்ற குடும்ப உறவே அனைத்து நிலைகளிலும் தலைமையானதாக விளங்கி யுள்ளமையைப் பெரியபுராணம் காட்டும். பின்னாளில் பாடிய பாடலுக்கு முன்னோடி களாக சேக்கிழார் காட்டிய பெண்மணிகள் திகழ்ந்துள்ளனர். அப்பெண்மணிகளுள் இல்லற வாழ்வு சிறக்க சைவச் சின்னமாகிய திருநீறு அணியாது, தம் சமய உணர்வுகளை மறைத்து உள்ளன்போடு ஈசனைப் பணிந்து, மன்னனும் நாடும் உய்வு பெற சிந்தித்துச் செயல்பட்டு வெற்றி பெற்ற பெண்களின் சிறப்பினைத் தாம் மட்டுமே கூறுவதாக அமையாது, அடியார் வாயிலாகவும் குறிப்பிட்டுள்ளார். குடும்பப் பெண்களின் தனிச் சிறப்பினை இவ்வாறு எழிலுறப் புலப்படுத்தியுள்ளார். சமணம் நீங்கிச் சைவம் தழைக்கப் பாடுபட்டவர்களில் இசைஞானியர், திலகவதியார், மங்கையர்க் கரசியார் போன்றோர் வழியேயும், அடியார் மனைவியரின் திருத்தொண்டுகள் வாயிலாக வும் தனியடியார்கள் சிறப்புகளைப் பெற்றனர். சைவம் தழைக்கவும், விருந்தோம்பல் பணிகள் சிறப்படையவும் நாயன்மார்களின் மனைவியர் உறுதுணை புரிந்த சிறப்பினை யும் தெள்ளிதின் உணர முடிகிறது.

## அடிக் குறிப்பு

1. திரு.வி.க., நாயன்மார் வரலாறு, மங்கையர்க்கரசியார் திருத்தொண்டர் திருவந்தாதி, ப. 328.
2. மங்கையர்க்கரசியார் புராணம், பா. 4191.
3. காரைக்கால் அம்மையார் புராணம், பா. 171.
4. மேலது, பா. 1781.
5. மேலது, பா. 1727.
6. மேலது, பா. 1741.
7. மேலது, பா. 1772.
8. மேலது, பா. 1781.
9. தடுத்தாட்கொண்ட புராணம், பா. 149.
10. மேலது, பா. 149.

## துணைநூற் பட்டியல்

### முதன்மைச் சான்றாதாரங்கள்

1. சுப்பிரமணிய முதலியார், சி.கே. சேக்கிழார் பெரியபுராணம். சென்னை: சாது அச்சுக்கூடம், முதற்பதிப்பு, 1954.
2. திருவள்ளுவர்; பரிமேலழகர் (உரை). திருக்குறள். சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், மறுபதிப்பு, 1970.
3. கங்கை, ப. பெரியபுராணத்தில் முப்பொருள். சென்னை: வேமன் பதிப்பகம், நுங்கம்பாக்கம், இரண்டாம் பதிப்பு, 1998.

### துணைமை சான்றாதாரங்கள்

1. இராமசுப்பிரமணியன், வ.த. பெரிய புராணம் எனப்பெறும் திருத்தொண்டர் புராணம்: மூலமும் தெளிவுரையும், திருமகள் நிலையம், தி. நகர், சென்னை –600017.
2. இராமநாத பிள்ளை, ப.; சிதம்பரனார், அ. திருமந்திரம் – மூவாயிரம். திருநெல் வேலி: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், ஒன்பதாம் பதிப்பு, 2003.
3. இராமலிங்கம், அரங்க. தெய்வச் சேக்கிழார். சென்னை: திருவாசக– திருமந்திர அறக்கட்டளை, முதற்பதிப்பு, 2005.
4. இராமலிங்கம், அரங்க. திருஞான சம்பந்தரின் ஆளுமைத்திறன். சென்னை: அநுராகம், தியாகராய நகர், முதற்பதிப்பு, 2003.
5. கருணாநிதி, ந. சேக்கிழார் போற்றும் சிவனடியார்கள். சென்னை: ஜோதி புத்தக நிலையம், நங்கநல்லூர், முதற் பதிப்பு, 2003.
6. திலகவதி, க. சங்ககால மகளிர் வாழ்வியல், திருச்சிராப்பள்ளி, இறையருள் பதிப்பகம்.
7. தெய்வத்திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். பெரியபுராணம். சென்னை: குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சிந்தாதிரிப் பேட்டை, இரண்டாம் பதிப்பு, 2003.